சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிற அறிவிப்புகள் – தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழி கருத்தரங்கம் நடத்துவதற்கு ரூ.2,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.166

நாள் 25.11.2021
பிலவ, கார்த்திகை – 9
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்க:–

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிற அறிவிப்புகள் – அறிவிப்பு எண் 1705
2. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளரது (பொ) கடித ந.க.எண்.க2/02214/2021, நாள் 22.10.2021

******

ஆணை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150–வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு 3.9.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

"தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழி கருத்தரங்கம் நடைபெறும்"

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளரது கடிதத்தில், இணையவழியில் நடத்தப்படும் பன்னாட்டுக் கருத்தரங்கம் "கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி 150" என்ற தலைப்பில் அமையும் என்றும், இணைய வழியில் 30 அமர்வுகள் (30 நாட்கள்) என ஒவ்வொரு நாளும் மாலை 6 மணியிலிருந்து 7.30 வரை Cisco Webex செயலியின் வழியாக நடைபெறும் என்றும், ஒவ்வொரு அமர்வும் கருத்துரை மற்றும் கலந்துரையாடல் என்ற நிலையில் அமையும் என்றும், வல்லுநரின் கருத்துரைகள் தொகுக்கப்பட்டு பின்னர் நூலாக்கம் செய்யப்படும் என்றும், வல்லுநர்கள் உலகளாவிய நிலையில் உரிய குழுக்களால் தெரிவு செய்யப்படுவர் என்றும், தொடக்கவிழா, நிறைவு விழாக்களில் தமிழக முதலமைச்சர் மற்றும் துறை அமைச்சர்கள் பங்கேற்கவும் உலகளாவிய சிறப்பு அழைப்பாளர்கள் பேருரையாற்றும் வகையிலும் கருத்தரங்க நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்படும் என்றும், கருத்தரங்க நிகழ்வுகள் Youtube நேரடி இணைய தளத்தில் ஒளிபரப்பப்படும் என்றும், பதிவு செய்யப்பட்ட கருத்தரங்க நிகழ்வுகள் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும் என்றும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் கருத்தரங்கப் பொருண்மைகள் பின்வருமாறு அமையப்பெறும் என்றும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்:-

i). வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாறு
ii). விடுதலைப் போராட்ட வரலாறு
iii). தொழிலாளர் உரிமைப் போராட்டங்கள்
iv). வ.உ.சி.யும் தொழிற்சங்கங்களும்
v). வ.உ.சி. தொடங்கிய அமைப்புகளும் அதன் நோக்கங்களும்
vi). சுதேசிக் கப்பலோட்டிய வரலாறு
vii). வழக்கறிஞர் பணி
viii). சிறை வாழ்வும் போராட்டமும்
ix). வ.உ.சி.யின் படைப்புகள்
x). பதிப்பித்த நூல்களும் பதிப்புத் திறன்களும்
xi). உரையெழுதிய நூல்களும் உரைத்திறன்களும்
xii). மொழிப்பெயர்ப்பு நூல்களும் மொழிபெயர்ப்புத் திறன்களும்
xiii). வ.உ.சி – சொற்பொழிவுகள்
xiv). வ.உ.சி.யின் சமுதாயப் பங்களிப்புகள்
xv). வ.உ.சி.யும் சமூக நல்லிணக்கமும்
xvi). அறிஞர்கள் பார்வையில் வ.உ.சி.
xvii). வ.உ.சி. – வரலாற்று அடையாளங்கள்
xviii). ஒப்பியல் நோக்கில் வ.உ.சி.–யும் சமகால இந்தியச் சூழலும்
xix). வ.உ.சி.–யும் உலகச் சிந்தனை மரபும்
xx). வ.உ.சி.–யும் அவரது கட்டுரைகளும்
xxi). வ.உ.சி.–யின் தத்துவச் சிந்தனைகள்
xxii). காலனிய எதிர்ப்புச் சிந்தனைகள்
xxiii). வ.உ.சி.–யின் போராட்ட வடிவங்கள்
xxiv). வ.உ.சி. குறித்த வழக்குகளும் தீர்ப்புகளும்
xxv). உலகப் பார்வையில் வ.உ.சி.
xxvi). தேசியப் பார்வையில் வ.உ.சி.
xxvii). தமிழகப் பார்வையில் வ.உ.சி.
xxviii). வ.உ.சி.–யின் இதழியல் பங்களிப்பு
xxix). வ.உ.சி.–யின் மொழிப்பற்றும் மொழி ஆளுமையும்
xxx). வ.உ.சி.–யும் அவர் கால ஆளுமைகளும்
xxxi). காலனிய கப்பல் வணிகமும் வ.உ.சி.யின் சுதேசிக் கப்பலும்
xxxii). வ.உ.சி.–யின் அடையாளங்களும் ஆவணச் சின்னங்களும்

4. மேலும், ஆலோசனைக் குழு, ஒருங்கிணைப்புக் குழு, தொழில்நுட்பக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளதுடன், இப்பணிக்கான

செலவினத் திட்டம் பின்வருமாறு அமையும் என்றும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.:-

| வ. எண் | செலவினம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | அழைப்பிதழ் (தொடக்கவிழா, நிறைவுவிழா) | 10,000 |
| 2 | மதிப்பூதியம் – வல்லுநர்கள் (30x3000) | 90,000 |
| 3 | சிறப்பு அழைப்பாளர்கள் – சிறப்பு செய்தல் | 25,000 |
| 4 | கணினித்தொழில்நுட்பம் | 10,000 |
| 5 | நூலாக்கம் (பேராளர்களின் கட்டுரைத் தொகுப்பு) | 1,00,000 |
| 6 | சான்றிதழ் (பேராளர், பங்கேற்பாளர்) | 10,000 |
| 7 | இதர செலவினம் | 15,000 |
| | கூடுதல் | 2,60,000 |

(ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்.)

5. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளரின் கருத்துருவின் அடிப்படையில், "கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. 150" என்ற தலைப்பில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணைய வழி கருத்தரங்கினை தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாக நடத்துவதற்கும் இக்கருத்தரங்கத்தினை நடத்துவதற்கு ஆலோசனைக் குழு, ஒருங்கிணைப்புக் குழு, தொழில்நுட்பக் குழு ஆகிய குழுக்களை அமைப்பதற்கும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுமதி அளித்தும், இணையவழி கருத்தரங்கத்தினை நடத்துவதற்கு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு தொடராச் செலவினமாக ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202 பொதுக் கல்வி – 03. பல்கலைக் கழகக் கல்வியும் உயர் கல்வியும் – 102 பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி – மாநிலச் செலவினங்கள் – AI தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
IFHRMS (த.தொ.கு. 2202 03 102 AI 30903)

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,00,000/-, 2021-2022-ஆம் நிதி ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட

இக்கூடுதல் செலவினத்திற்கான கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ.(ம)செ.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5-இல் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட தொகையை தஞ்சாவூர் மாவட்டக் கருவூலத்தில் பெற்று தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வழங்க தஞ்சாவூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநருக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

9. இத்திட்டத்திற்காக பெறப்படும் தொகை உரிய திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும், இத்தொகைக்கான பயனீட்டுச் சான்று மற்றும் செலவின விவரங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும், அரசுக்கும் அனுப்பி வைக்குமாறு தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.51321/நிதி (தவ(ம)செ)/ 2021, நாள் 25.11.2021-இல் பெற்ற இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.943 (தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
பதிவாளர்(பொ), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010.
உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, தஞ்சாவூர்
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
நகல்:
மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
நிதி(தவ(ம)செ/வ.செ.பொ.II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
இகோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

25/11/21